**சமுர்த்தி நிதியம் - 2018**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சமுர்த்தி நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொததுக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தைத் தவிர, நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன உண்மையான மற்றும் நியாயமான விதத்தில் இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது இந்த அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். முகாமைத்துவம் நிதியத்தைக் கணக்கொழிப்பதற்குக் கருதினால் அல்லது மாற்றீடு இல்லாவிடின் செயற்பாடுகளை இடை நிறுத்த நடவடிக்கை எடுத்தாலே தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் குறித்த விடயங்களை வெளிப்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயற்பாடு தொடர்பான பொறுப்பு அவ்வாளுகைக்குட்பட்ட தொடர்புடைய தரப்பினரால் மேற்கொள்ளப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலநேரத்திலான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் அவசியமாகும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலாக இருந்தபோதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் தாக்கமளிப்பதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதாரத் தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக ஏற்படக்கூடிய தாக்கங்களைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடு சம்பந்தமாக புரிந்து கொண்ட போதும், உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மை தொடர்பாக அபிப்பிராயத்தை வெளியிடக் கருதவில்லை.

- முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் சரியான தன்மையினையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளினதும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினதும் நியாயபூர்வத் தன்மையை மதிப்பாய்வு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக நிறுவனம் தொடர்ந்தியங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினடிப்படையில் கணக்கீடு சம்பந்தமான நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களிலுள்ள அத்தகைய வெளிப்படுத்தல்களுடன் எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும். அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது

அபிப்பிராயம் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். எனது முடிவானது கணக்காய்வு அறிக்கைத் தினம் வரையான கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலானவை. எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள், அல்லது நிலைமை காரணமாக தொடர்ந்தியங்கும் தன்மை முடிவுக்கு வரலாம்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமை, நடைமுறைகள், ஏடுகள், அறிக்கைகள், மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிமைக்கப்பட்டுள்ளனவா என்பதும் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணப்படுகின்றதா என்பதும்,
- நிதியத்தின் ஆளுநர் சபையால் வழங்கப்பட்ட ஏதாவதொரு எழுத்துமூலச் சட்டம் அல்லது ஏனைய பொது அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,
- அதன் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் ஆக்க பூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள்

#### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களை மாத்திரம் அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

## 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் 07 ஆம் பந்தியின் பிரகாரம் கொடுக்கல் வாங்கல்கள், வேறு நிகழ்வுகள் மற்றும் சந்தர்ப்பங்கள் என்பன அவை இடம்பெற்ற குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். எனினும், சமுர்த்தி சமூக வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்கள் பேணப்பட்டு வரும் 1286 கட்டிடங்களுக்கான பெறவேண்டிய வாடகை வருமானம் ரூபா 15,432,000 நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுவதற்குப் பதிலாக தேறிய உள்ளபடியான வருமானம் ரூபா 489,000 மட்டுமே நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 2017 ஆம் வருடத்திலிருந்து கட்டிட வாடகை அந் நிதியத்திற்கு எடுக்கப்படுதலானது 2017/07 சமுர்த்தி சமூக அடிப்படையிலான வங்கிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் இடை நிறுத்தப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கை குறிப்பு (i) இன் கீழ் நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் கடந்த இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்ட போதிலும் குறிப்பு இலக்கம் (iv) இன் கீழ் சமுர்த்தி வங்கி / வங்கிச் சங்கங்களின் கட்டிட வாடகையாக வருடாந்தம் அறவிடப்படுகின்ற தொகை , தேறிய உள்ளபடியான வருமானத் தொகையின் அடிப்படையில் கணக்கிடப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. | 2017 ஆம் வருடத்திலிருந்து கட்டிட வாடகை அந் நிதியத்திற்கு எடுக்கப்படுதலானது 2017/07 சமுர்த்தி சமூக அடிப்படையிலான வங்கிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுத்தப்பட்டுள்ளது. | - மேற்படி - |

### 1.5.3 கணக்காய்விற்கான சாட்சிகள் இல்லாமை

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | புதிய அவதான மொன்றாக / காணப்பட்ட அவதானமொன்றாக | கட்டுப்பாட்டிற்கான கவனத்தை வெளிப்படுத்தல் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| பெற வேண்டிய மீன்பிடி மற்றும் விலங்கு வேளாண்மை மற்றும் பெற வேண்டிய விவசாய மிகுதிகள் | ரூபா<br>ரூபா 16,822,873 | விபரப்பட்டியல் மற்றும் நிலுவை உறுதிப்படுத்தல்கள் | காணப்பட்ட | முறைமை அறிமுகப் படுத்துதல் | பெற வேண்டிய தொகை தொடர்பாக நிலுவை உறுதிப்படுத்தல்களை விரைவில் கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.. | குறிப்பட்ட விபரப் பட்டியல் மற்றும் நிலுவை உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 ஆம் வருடத்தில் தேசத்தின் மகுடம் நிகழ்ச்சித்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட 03 மாவட்டங்களுக்கான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக திறைசேரியினால் மீள் நிரப்புதல் அடிப்படையில் வழங்கப்பட்ட ரூபா 212,000,000 ஆன கடன் தொகையொன்று திறைசேரியின் அங்கீகாரமின்றி நிதியத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. 2018 சனவரி 02 ஆந் திகதிய BD/RDS/331/01/01 கடிதத்தில் அக்கொடுப்பனவு தொடர்பாக திறைசேரியின் எழுத்து மூலமான அங்கீகாரமொன்று வழங்கப்பட்டிராமையால் இத்தொகை மீள் நிரப்பப்படுவதற்கான இயலுமையொன்று இல்லையென்பதாக தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களப் பணிப்பாளரினால் குறிப்பிடப்பட்டு அனுப்பப்பட்டிருந்தது. | மீள் நிரப்பப் படுவதற்காக திறைசேரிக்கு தொடர்ந்து கோரிக்கை விடுக்கப்பட்டள்ளது. | பெற வேண்டிய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச மக்கள் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 395(ஆ) | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் ஒவ்வொரு மாதங்களுக்குமான வங்கி இணக்கக் கூற்று அடுத்து வரும் மாதத்தின் 15 நாட்களுக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ள போதிலும் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வங்கி இணக்கக் கூற்று நாளது வரையாக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 சுற்றறிக்கை மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15.1 ஆம் பந்தியின் மூலம் உள்ளடக்கப்பட்டுள்ள நிதிப்பிரமாணம் 876(3) | நிதியத்தை சட்டரீதியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததுடன் திவிநெகும (சமுர்த்தி) அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் இந்நிதியம் தொடர்ந்தும் பேணப்பட்டு வருவதற்குமான தேவைப்பாடு தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | திவிநெகும அதிகாரச் சட்டத்தின் 36 ஆம் பிரிவின் பிரகாரம் சமுர்த்தி அபிவிருத்தி நிதியம் நிறுவப்படும் வரையில் இந் நிதியம் பேணப்பட்டு வருகின்றது. | நிதியத்தைச் சட்டரீதியாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவு ரூபா 159,271,733 ஆன மிகையாக பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 127,501,983 ஆக இருந்தமையால் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 286,773,716 ஆன முன்னேற்றமொன்று காணப்பட்டது. மீளாய்வாண்டில் சமூக அடிப்படையிலான வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களுக்கான கட்டிடங்களுக்கான வசதிகள் வழங்குவதற்கான செலவுகள் இல்லாதிருந்தமை இம்முன்னேற்றம் ஏற்படுவதற்கு காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சமுர்த்தி சமூக வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களை ஸ்தாபிப்பதற்குத் தேவையான நிதி வசதிகளை வழங்குதல் இந் நிதியத்தின் நோக்கமொன்று என்பதுடன் சமுர்த்தி சமூக வங்கிகள் சுற்றறிக்கை இலக்கம் 2017/7 இன் பிரகாரம் செலவுகளை மேற்கொள்தல் இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டில அதற்காக எவ்வித செலவொன்றும் செய்யப்படவில்லை. | சமுர்த்தி சமூக வங்கிகள் சுற்றறிக்கை இலக்கம் 2017/7 இன் பிரகாரம் செலவுகள் மேற்கொள்தல் இடைநிறுத்தப்பட்டது. | நிதியத்தின் நோக்கத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஜப்பானிய நிறுவனமொன்றினால் சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சிற்கு நன்கொடையாகப் பெறப்பட்டிருந்த பேருந்தினைப் பெற்றுக்கொள்வதற்கான சுங்கக் கட்டணம் மற்றும் விடுவிக்கப்படுவதற்கான கட்டணங்களைச் செலுத்துவதற்காக திணைக்களத்திடம் ஒதுக்கங்கள் இல்லாமையால் தேவையான மேலதிக ஒதுக்கங்கள் தேசிய வரவு செலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகத்திடம் கோரப்பட்ட போதிலும் 1994 ஆம் வருடத்தில் உற்பத்தி செய்யப்பட்ட இப்பேருந்தினைப் பெற்றுக் கொள்வது பொருளாதார மற்றும் பயனுள்ளதாகவும் இல்லாத காரணத்தினால் ஒதுக்கங்களை வழங்க முடியாதெனவும் வரவு செலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகத்தினால் குறிப்பிட்டு அனுப்பபட்டிருந்தது. எனினும் 2018 பெப்ரவரி 24 இல் இப்பேருந்து அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்திருந்ததுடன் 2018 மார்ச் 14 துறைமுகத்திலிருந்து விடுவிப்பதற்காக சமுர்த்தி நிதியத்திலிருந்து ரூபா 2,637,705 செலுத்தப்பட்டிருந்தது. | இறக்குமதி அனுமதிப்பத்திரத்தின் காலாவதித் திகதி மார்ச் 18 என்பதால் கப்பல் மூலம் பெற்றுக் கொள்வதற்கு போதியளவு நேரம் இல்லாமையால் பேருந்தினை அனுப்புவதற்காக மின்னஞ்சல் அனுப்பப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்டது. சுங்கக் கட்டணமாக ரூபா 2,552,900 ஆன தொகையொன்று இலங்கை சுங்கத்திற்கு செலுத்த உத்தரவிடப்பட்டதுடன் அக் கொடுப்பனவிற்காக வரவு செலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகத்தினால் மேலதிக ஒதுக்கங்கள் வழங்கப்படாமையால் பேருந்தை அம்பாந்தோட்டை துறைமுகத்திலிருந்து விடுவிப்பதற்கு தாமதமேற்பட்டதால் துறைமுகக் கட்டணம் மற்றும் மேலும் தாமதமேற்பட்டதால் தண்டப் பணம் | தேவையான மேலதிக ஒதுக்கங்களைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | செலுத்த வேண்டியேற்பட்டதால் தேசிய சபையின் ஒப்புதல் அங்கீகாரத்தின் கீழ் சமுர்த்தி நிதியத்திலிருந்து குறிப்பிட்ட கட்டணங்களைச் செலுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

## 3.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

-----------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெற வேண்டிய தொகையில் உள்ளடக்கப்பட்டுள்ள மொத்தம் ரூபா 16,822,875 ஆனது விவசாய, மீன்பிடி மற்றும் வேளான்மைக் கட்டுப்பாட்டுச் செயற்திட்டத்திற்காக சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 2007 வரையில் திறைசேரி ஒதுக்கங்களின் அடிப்படையில் சமுர்த்தி அதிகார சபையினால் மீண்டும் அறவிடப்படும் அடிப்படையில் பயனாளிகளுக்கு சுழற்சி முறையில் வழங்கப்பட்டிருந்த கடன் களின் பெற வேண்டிய பெறுமதி ஆகும். இக் கடன் அறவீடுகள் 2007 யூலை 16 ஆந் திகதிய ச/அடி/10/ஜாச.கம்/ சுழலும் நிதியம் ஆம் இலக்க சமுர்த்தி பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தலின் பிரகாரம் பிரதேசச் செயலக அலுவலகங்களில் ‘‘கம் புபுது வாழ்வாதாரச் சுழற்சி’’ கணக்கிற்கு செலவு வைப்பதற்கு கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு வரையில் அறிக்கை சமர்ப்பித்தல் அல்லது பணம் தீர்க்கப்படுதல் மேற்கொள்ளப்படவில்லை. | 2007 ஆம் வருடத்திலிருந்து நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்துதல் பிரதேசச் செயலகத்திற்கு கையளிக்கப்பட்டிருந் தது. அதனால் 2007 இற்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த செயற்திட்டத்திற்களு க்கான தவணை மட்டும் பிரதான அலுவலகத்திற்கு கிடைத்திருந்தத. | நிதியத்தின் நோக்கத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அறிக்கைகள் முறையாகப் பெறப்பட்டு கடன் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதியத்தின் நோக்கமான சமூக அடிப்படையிலான வங்கிகள்/வங்கிச் சங்கங்களை ஸ்தாபிப்பதற்குத் தேவையான நிதி வசதிகளை வழங்குவதறகாக திவிநெகும சமூக அடிப்படையிலான வங்கிகள்/வங்கிச் | திவிநெகும சட்டத்தின் 36 ஆம் பிரிவின் பிரகாரம் சமுர்த்தி அபிவிருத்தி நிதியம் நிறுவப்பட்டதன் பின்னர் | நிதியம் நிறுவப் பட்டதற்கான நோக்கத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

சங்கங்களின் கட்டிட வாடகைகளைப் பெற்றுக் கொள்ளல் , அந்த வங்கிகள்/வங்கிச் சங்கங்களின் கட்டிடங்களைப் பராமரிப்பதற்கு , நவீன மயமாக்குவதற்கு மற்றும் புதிய கட்டிடங்களை ஆரம்பிப்பதற்கு திறைசேரி ஏற்பாடுகளைத் தவிர தேவையான நிதிப் பங்களிப்பு வழங்கப்பட்டிருந்தகாகக் கூறப்பட்டிருந்த போதிலும் 2017 யூன் 9 ஆந் திகதிய சமுர்த்தி சமூக அடிப்படையிலான வங்கிகள் சுற்றறிக்கை இலக்கம் 2017/7 கொண்ட சமுர்த்தி சமூக அடிப்படையிலான வங்கிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் இந்நிதியத்திற்கு இற்றை வரையில் செலவு வைக்கப்பட்டுள்ள கட்டிட வாடகை சமுர்த்தி நிதியத்திற்கு செலவு வைக்காது இருக்குமாறு 2017 ஆம் வருடத்திலிருந்து சமுர்த்தி சமூக அடிப்படையிலான வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களினால் அத்தொகை தமது ''வங்கிக் கட்டிட அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு நிதியக் கணக்கு '' இற்கு செலவு வைக்குமாறு உரிய கணக்குக் குறிப்பு வைக்கப்பட வேண்டிய முறைமையொன்று குறிப்பிடப்பட்டு சுற்றறிக்கை வெளியிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்நிதியம் உருவாக்கப்பட்டதற்கான நோக்கம் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் தொடர்பான சர்ச்சையான நிலைமையொன்று ஏற்பட்டிருந்தமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது. இத்தீர்மானத்திற்கு உடன்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டிற்காக 1286 சமூக அடிப்படையிலான வங்கிகள்/வங்கிச் சங்கங்களில் பெறப்பட வேண்டிய வாடகை வருமானம் ரூபா 15,432,000 ஆக இருந்த போதிலும் பெற்ற வருமானம் ரூபா 489,000 மட்டுமே ஆகும்.

எதிர்காலத்தில் எடுக்கப்படுகின்ற முடிவுகளின் அடிப்படையில் மேற்கொண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15.1 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 877(2)(ஈ) பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதத்திற்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாததுடன் 2018 ஆம் வருடத்தின் நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 10 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்கள் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்பட்ட பின்னர் சமர்ப்பிக்கப்படும். | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை பிரகாரம் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் கணககுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.. |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.1 ஆம் பந்தி மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15.1 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 877(1) பிரகாரம் நிதியத்தின் அலுவல்கள் சம்பந்தமாக வரவு செலவுத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதியத்தின் அலுவல்கள் சம்பந்தமாக எதிர் காலத்தில் எடுக்கப்படுகின்ற முடிவுகளின் அடிப்படையில் மேற்கொண்ட நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை பிரகாரம் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் வரவு செலவுத் திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 4.3. முகாமைத்துவ தகவல் முறைமையின் செயற்திறன்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியம் சட்டரீதியாக்கப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று ஸ்தாபிக்கப்படுவதுடன் புத்தகங்கள் மற்றும் பதிவுகளை முறையான வகையில் பேணுவதுடன் முறையாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கான விசேட அவதானம் வேண்டப்படுகின்றது. | அவதானிப்பில் குறிப்பிடப்பட்டவாறு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியம் சட்டரீதியாக்கப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று ஸ்தாபிக்கப்பட் புத்தகங்கள் மற்றும் பதிவுகளை முறையான வகையில் பேணுவகற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |